DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC. 470/ 2026 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | திரு.வேம்படிமுத்து |
| Father Name | மகாராஜன் |
| Village | வாழவள்ளான் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**<u>(எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 15-06-2026.(நேரம்: 12.25PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1.நான் வாழவள்ளான் குலாளர் தெருவில் வசித்து வருகிறேன்.

2. நான் செங்கல் மாலில் வேலை பார்த்து வருகிறேன்.

3. எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது.

4. நான் சம்பவம் நடக்கும்போது சம்பவ இடத்தில் இல்லை. மற்றவர்கள் சொல்லி எனக்கு சம்பவம் பற்றி தெரியவந்தது. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது.

5. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போலிசார் சொன்னபடி புகார் வாக்குமூலம் எழுதிக்கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள M.வேம்படிமுத்து என்ற கையொப்பம் மட்டும் என்னுடைய கையொப்பம் ஆகும். **M.வேம்படி முத்து என்ற என்னுடைய கையொப்பம் மட்டும் அசாஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

6. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அ.சா 1 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 1ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்களிடம் உள்ள விறகு உடைக்கும் டிரெக்டரை ஆழ்வார்திருநகரி மணல்குண்று பரணி சேம்பருக்கு அனுப்பியிருந்தோம் என்றும் மேற்கண்ட டிரெக்டரை எடுப்பதற்காக 14.04.2023 ஆம் தேதி அதிகாலை எனது அப்பாவும், எங்கள் சூளையில் வேலை பார்க்கும் பெருங்குளத்தை சேர்ந்த செல்வமும், என் அப்பாவின் TN92H 9949 என்ற எண் கொண்ட ஸ்கூட்டி செஸ்ட் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு சென்றனர் என்றும் பரணி சேம்பர்சென்று எனது அப்பா செல்வத்தை இறக்கிவிட்டு டிரெக்டரை எடுத்து வரசொல்லிவிட்டு எனது அப்பா அவரது மோட்டார் சைக்கிளில் முன்னாடி செல்ல செல்வம் மேற்படி டிரெக்டரில் பின்னால் வந்துள்ளார் என்றும் அன்று அதிகாலை சுமார் 05.30 மணிக்கு திருநெல்வேலி டு திருச்செந்தூர் மெயின் ரோட்டில் பால்குளம் டிபிஎஸ் எடை நிலையத்திற்கு கிழக்கே எனது அப்பா மேற்கில் இருந்து கிழக்காக சென்றபோது அதே ரோட்டில் எதிரே கிழக்கில் இருந்து மேற்காக வந்த TN72N 1939 என்ற தமிழ்நாடு அரசுபேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் ஓட்டி வந்து எனது அப்பா வண்டியில் மோதியுள்ளார் என்றும், இதில் எனது அப்பா கீழே விழுந்துள்ளார் என்றும் இதே பார்த்த பின்னால் டிரெக்டரில் வந்துக்கொண்டிருந்த செல்வம் மற்றும் அந்த வழியாக வந்தவர்கள் எனது அப்பாவை தூக்கி பார்க்க அவருக்கு வலது காலில் ரத்தகாயமும், உடம்பில் ஊமை காயங்கள் ஏற்பட்டு பேச்சு, மூச்சு இல்லாமல் இருந்துள்ளார் என்றும் உடன் அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்து 108 ஆம்புலன்ஸ் மூலம் ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர் என்றும் மேற்படி செல்வம் எங்களுக்கு தகவல் கொடுக்க நானும், எனது தம்பி பண்டாரமும், ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு வந்து எனது அப்பாவை பார்த்தோம் என்றும் அங்கு எனது அப்பாவிற்கு முதல் சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக TVMCH க்கு அனுப்பிவைத்தனர் என்றும் பின்பு விசாரித்தப்போது என் அப்பா மீது மோதிய அரசு பேருந்தை ஓட்டி வந்தது ஸ்ரீவைகுண்டம் பேரூர் மேல தெரு சுப்பிரமணியன் மகன் குழந்தை வேல் என்பதை தெரிந்துக்கொண்டேன் என்றும்

எனது அப்பா என்ன சிகிச்சை பெற்று வருகிறார் என்று என் அப்பா பேச இயலாத நிலையில் நான் என் அப்பாவிற்காக புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் அதில் எனது தம்பி பண்டாரம் அறிவேன் சாட்சியாக கையெழுத்து போட்டான் என்றும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு மிகவும் தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.